


20.07.2024

தலைப்புச் செய்திகள்

1. மைக்ரோ சா.ஃ.ப்ட் மென்பொருள் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட விமான சேவைகள் சீரடைந்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை மறுநாள் தொடங்குவதால் மத்திய அரசு நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

3. வங்க தேசத்தில் உள்ள தமிழர்கள் தாயகம் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

4. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 65 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ள நிலையில், அணையின் நீர்மட்டம் 62.5 அடியாக உயர்ந்துள்ளது.

5. உலக ஜூனியர் ஸ்குவாஷ் சேம்பியன் பட்ட போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்திய ஆடவர் குழு - கனடாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மைக்ரோ சா.ஃ.ப்ட்

உலகளாவிய மைக்ரோ சா.ஃ.ப்ட் விண்டோஸ் மென்பொருள் செயலிழப்பு தொடர்பாக பாதிக்கப்பட்ட விமான சேவைகள் அனைத்தும் படிப்படியாக சீரடைந்து வருகின்றன.

இதனிடையே நம் நாட்டில் விமான போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அனைத்து விமான சேவைகளும் படிப்படியாக இயங்குவதாக கூறியுள்ள அமைச்சகம் விமான நிலைய செயல்பாடை அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாக தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை விமான நிலையத்தில் 24 மணி நேரத்திற்கு பின்னர் இணையதள சேவைகள் சீரடைந்தை அடுத்து பயணிகளுக்கான போர்டிங் பாஸ் கணினி மூலமாக வழங்கும் பணிகள் மீண்டும் தொடங்கியுள்ளன.

இன்று மாலைக்குள் அனைத்து விமான சேவைகளும் முழுமையாக சீரடைந்துவிடும் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பட்ஜெட் கூட்டத்தொடர்

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை மறுநாள் தொடங்க உள்ள நிலையில் மத்திய அரசு நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

நாடாளுமன்ற இரு அவைகளும் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து கட்சிகளின் ஒத்துழைப்பை மத்திய அரசு இந்த கூட்டத்தில் கோருகிறது.

வரும் திங்கட்கிழமை பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளது.

தொடர்ந்து வரும் செவ்வாய்கிழமை காலை 11 மணிக்கு நடப்பு நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

பிரதமராக திரு. நரேந்திரமோடி 3-வது முறையாக பொறுப்பேற்ற நிலையில் தாக்கல் செய்யப்படும் முதல் நிதிநிலை அறிக்கையாகும் இது.

மத்திய அரசின் தொலைநோக்கு பார்வையை முன்னெடுத்துச்செல்லும் வகையில் எதிர்கால கட்டமைப்பிற்கான பல்வேறு புதிய திட்டங்கள் இதில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 12ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் உலக பாரம்பரிய கலாச்சார குழுவின் 46ஆவது சிறப்பு கூட்டம் புதுதில்லியில் நாளை நடைபெறுகிறது.

இந்தியா சார்பில் நடைபெறும் இந்த கலாச்சார கூட்டத்தை பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

வரும் 31ஆம் தேதிவரை நடைபெறும் இக்கூட்டத்தில் பாரம்பரிய பெருமைகள், கலாச்சாரத்தின் முக்கியத்துவம் போன்றவற்றை பராமரிக்கும் நிலைப்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

யுனஸ்கோவின் தலைமை இயக்குனர் ஆட்ரே அஸவ்லே இதில் கலந்துகொள்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நீட்

நீட் இளநிலை மருத்துவ சேர்க்கை நுழைவு தேர்வு தொடர்பான தேர்வு மையங்கள் அடிப்படையிலான முடிவுகளை தேசிய தேர்வு முகமை இன்று வெளியிட்டுள்ளது.

முன்னதாக நேற்றுமுன் தினம் நடைபெற்ற நீட் முறைகேடுகள் தொடர்பான விசாரணையின்போது தேர்வு மையங்கள் மற்றும் நகர்பகுதிகள் அடிப்படையிலான முடிவுகளை இன்று மதியத்திற்குள் தேசிய தேர்வு முகமை வெளியிட வேண்டும் என்று உச்சநிதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து தேர்வு முடிவுகள் தற்போது நெநவ.வெயழடெைநெ.டை என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

நீட் தொடர்பான அடுத்த கட்ட விசாரணை உச்சநீதிமன்றத்தில் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர் - வங்கதேசம்

வங்க தேசத்தில் உள்ள தமிழர்கள் தாயகம் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தற்போது அங்கு நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக தமிழர்கள் தாங்கள் வசிக்கும் வளாகங்களிலேயே முடங்கியுள்ளதாக செய்திகள் வந்தநிலையில் அவர்களது விவரங்களை பெற்று உரிய உதவிகளை வழங்க அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையரகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

தாயகம் திரும்ப விரும்பும் தமிழர்கள் வங்க தேசத்தில் உள்ள தமிழ்நாடு அரசின் 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

8069009901 என்ற எண்ணை தொடர்பு கொண்டு மேல் விவரங்களை பெற்றுகொள்ளுமாறு முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர் - டெல்லி

இந்நிலையில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் நடைபெறும் நிதி ஆயோக் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வரும் 27ஆம் தேதி டெல்லி செல்ல உள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர் - ஆட்சித்தலைவர்கள்

நீலகிரி, கோவை மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக கன, மிக கன மழை பெய்து வரும் நிலையில், இவ்விரு மாவட்ட ஆட்சிதலைவருடன் முதலமைச்சர் தொலைபேசி மூலம் ஆலோசனை மேற்கொண்டார்.

உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அவர்களுடன் விவாதித்தார்.

நீர்நிலைகளின் நீர்மட்டம் அதிகரித்து வரும் நிலையில் கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை முடுக்கிவிடுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.

தமிழ்நாட்டில் வரும்முன் காப்போம் திட்டத்தின் மூலம் மக்களின் ஆரோக்கியம் காக்கப்படுவதாக மாநில வருவாய் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் செம்பட்டி ஊராட்சி அருகே இம்முகாமை இன்று துவக்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் ஊராட்சிகளில் பொதுமக்களின் உடல்நலத்தை பேண இந்த திட்டம் வகை செய்வதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெயசீலன் மக்களின் இருப்பிடங்களுக்கே சென்று மருத்துவ காப்பீடு அட்டை வழங்கும் சிறப்பு முகாம் இம்மாவட்டத்தில் விரைவில் தொடங்கப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சக்கரபாணி

பழனி - திருப்பதி நேரடி பேருந்து சேவையை மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி பழனியில் இன்று தொடங்கிவைத்தார்.

பேருந்து கட்டணம், உணவு, சிறப்பு தரிசனம் உள்ளிட்டவற்றிற்கு 5 ஆயிரம் ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு பழனியில் புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலை பழனி வந்து சேரும் இந்த பேருந்துக்கு ஒருவாரத்திற்கு முன்பாக இணையவழியில் முன்பதிவு செய்ய வேண்டும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கே.என்.நேரு

திருச்சியில் இருந்து 11 புதிய பேருந்துகள் சேவையை அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தனர்.

பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இன்றுமுதல் இந்த பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

அமோனியா வாயு கசிவு

தூத்துக்குடி மாவட்டம் புதூர் பாண்டியபுரத்தில் தனியார் மீன் பதனிடும் தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிவால் 21 பேருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மின்கசிவே இதற்கு மூலக்காரணம் என தெரிகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

ஒகேனக்கல்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை காரணமாக கபிணி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து காவிரியில் உபரி நீர் திறந்துவிடப்படுவதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 65 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

அதிகரித்து வரும் நீரால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சாந்தி வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளை ஆய்வு செய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதனிடையே மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 65 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதோடு, அணையின் நீர்மட்டமும் 62.51 அடியாக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

வெள்ளநீர் தொடர்ந்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் காவிரி ஆற்றங்கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

இருவரி

வுஸ்ளுஊ குரூப் 2, 2ஏ தேர்விற்கு விண்ணிப்பிக்க கால அவகாசம் இன்று நள்ளிரவு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும் 26ஆம் தேதி நடைபெற உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் முகாம் வரும் செவ்வாய் கிழமை நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் நாய் வளர்ப்போர் அரசின் அனுமதி பெறுவதுடன் தடுப்பூசி செலுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை - திருச்சி இடையே வாரத்தில் 7 நாட்களும் இயங்கும் விரைவு ரயில் சேவை இன்று தொடங்கியது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஸ்குவாஷ்

அமெரிக்க ஹுஸ்டனில் நடைபெறும் உலக ஜுனியர் ஸ்குவாஷ் சேம்பியன் பட்ட ஆடவர் குழு போட்டியில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியா - கனடாவை எதிர்கொள்கிறது.

மகளிர் குழு போட்டியில் இந்தியா பிரேசில் மற்றும் ஆஸ்திரேலியாவை வென்று காலிறுதிக்குள் நுழைவதை உறுதிசெய்துள்ளது.

மகளிர் குழு அடுத்த சுற்றில் ஹாங்காங்குடன் மோத உள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு